
## கமலஹாசன்



# எந்தக் கமல் நிஜமான கமல்?

கமலஹாசன். ‘குறத்தி மகன்’ படத்தில் ஒரு வரி வசனமும் பேசாமல் படம் முழுக்க சூட் அணிந்த பொம்மையாய் நிற்க வைக்கப்பட்ட நடிகன்; இன்று ‘ஏக் துஜே கே லியே’ ஏணியில் ஏறி அனைத்திந்திய சந்தையில் விலை பேசப்படும் சூப்பர் ஸ்டார். ஒரு பக்கம் கமலஹாசன் என்ற கலைஞனை, வர்த்தகத் திரைகளை விலக்கிப் பார்த்து ஆனந்தப்படுகிற சிறுபான்மை அறிவுஜீவி ரசிகர்கள். இன்னொரு பக்கம் ‘டீ! கமல்டீ!’ என்று கண்களை அகல விரித்து சொப்பனம் காணுகிற பெரும்பான்மை விடலைப் பெண் ரசிகர்கள். எப்படி இந்த நடிகனுக்கு இந்த இரண்டும் சாத்தியமாயிற்று? ‘ஹோமோ செக்ஷுவாலட்டி’ பற்றி ‘அறிவுஜீவித்’தனமாக (?) குறுநாவல் எழுதுகிற, தமிழிலும் ஆங்கிலத்திலும் சில இலக்கியப்

*பெயர்களை தாராளமாக உதிர்க்கிற, சினிமா உலகில் உள்ள ஏராளமான மடையர்களின் காலில் விழுந்து சேவிக்கிற, ரோமியோ உடையில் டப்பாங் குத்து ஆடுகிற - இதில் எந்தக் கமலஹாசன் நிஜம்? ஒருடலும் இரு முகங்களுமாய் உலவிக் கொண்டிருக்கிற இந்தக் கலைஞனை அடையாளம் காண முயற்சித்த சந்திப்பு கீழே.*

*முதல் நாள் சுப்ரமண்யராஜூவோடு போய், ஒரு கல்யாண மண்டபத்தில் படப்பிடிப்பின் இடையே கமலஹாசனைச் சந்தித்த போது ஒரு பத்து நிமிடமே உரையாடினோம். காலை 9 மணிக்கு மந்தவெளிப் பகுதி மக்கள் பலர் (பெரும்பாலும் பெண்கள்) தங்கள் அன்றாட அலுவல்களை, கவலைகளை மறந்துவிட்டு கமலஹாசன் தன் உத்யோகத்தை செய்துகொண்டிருப்பதைப் பார்ப்பதற்காக முண்டியடித்துக் கொண்டு வந்து இரண்டு கூர்க்காக்களிடம் உதைபட்டார்கள். உள்ளே நாங்கள், கமலஹாசன் இங்கிலீஷ் புத்தகங்களைப் பற்றியும், இந்தி சினிமா பற்றியும் பேசக் கேட்டுக் கொண்டிருந்தோம்.*

*பின்னர் மறுநாள் மாலை நாங்கள் மட்டும் (நான், பிரபஞ்சன்) கமலஹாசனை வீட்டில் சந்தித்தபோது முன் நாள் பேச்சின் தொடர்ச்சியாய் இந்த உரையாடல் ஆரம்பித்து ஒன்றரை மணிநேரம் நீடித்தது. ஓரிரு வாக்கியங்களைத் தவிர இந்த உரையாடல் ஆங்கிலேத்திலேயே நடந்தது ஒரு விபத்துதான்.*

**தமிழ்ப்படத்துறைக்கும், இந்தி இண்டஸ்ட்ரிக்கும் என்ன வித்தியாசம்?**

*ஒன்றும் பெரிய வித்தியாசங்கள் கிடையாது. அவர்களிடம் ஏராளமான பணம் இருப்பதால் அவசரப்படாமல் நிதானமாகப் படமெடுக்கிறார்கள். அங்கே வேகம் குறைவு.*

**நிதானமான படப்பிடிப்பு பயனுள்ளதல்லவா?**

*எப்போதும் அப்படியென்று சொல்லிவிட முடியாது. ஒரே காட்சியைப் படமெடுப்பதிலேயே அமிழ்ந்துவிடுகிற போது ஒட்டு மொத்தமான படத்தைப் பற்றிய பார்வை மங்கிவிடலாம்.*

**ஹிந்திப் படத் தயாரிப்பாளர்களும், டைரக்டர்களும் எப்படி இருக்கிறார்கள்?**

*சில விஷயங்களில் இங்கே இருப்பதைவிட மேல். வித்யாசமாக படமெடுக்கலாமே என்று நான் சொன்னால் கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால் கண்டிஷன் இதுதான். ரிஸ்க் என்னுடையது. வழக்கத்தைவிட குறைவானத் தொகை வாங்கிக் கொண்டு படம் ஓடினால் இலாபத்தில் பங்கு வாங்கிக் கொள்ளலாம். படம் விழுந்தால் அடி எனக்குத்தான்.*

*இங்கே தமிழில் அதற்கு நான் தயாரென்று சொன்னாலும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ''ரிஸ்க் எனக்குத்தான் சார்'' என்று தயாரிப்பாளர் சொல்வார்.*

*இங்கே இண்டஸ்ட்ரியில் இருக்கிற இலக்கிய அறிவு அங்கே இல்லை. இங்கே இருப்பவர்கள் சுஜாதா, ஜானகிராமன் என்று தெரிந்து வைத்திருக்கிறார்கள். அங்கே மராத்தி எழுத்தாளர்களை சந்திக்க விரும்பினேன். ஹிந்தி சினிமா துறையினருக்கு சினிமாவில் எழுதுபவர்களைத் தவிர மற்றவர்களைத் தெரியவில்லை.*

**தமிழிலிருந்து ஹிந்திக்கு போயிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*ஐ லைக் திஸ். ஆனால் கமலுக்கு இங்கு மார்க்கெட்டில்லை; ஃபெய்லியர் என்பதால் அங்கே போய் விட்டான் என்கிறார்கள். ஒன்பதாவதிலிருந்து பத்தாவது வகுப்புக்குப் போவதை எப்படி ஒன்பதில் ஃபெய்ல் ஆகிவிட்டதால் பத்தாவது போய்விட்டான் என்று சொல்ல முடியும்?*

**அப்படியானால் ஹிந்திப் படம் பத்தாம் வகுப்பா?**

*யெஸ். சர்ட்டென்லி. காரணம் அது இன்னமும் லார்ஜர் ஆடியன்சை அடைகிற விஷயம். இப்போது என்னை இந்தியா முழுக்கத் தெரியுமல்லவா!*

**இந்தியா முழுக்க உங்களைத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் சினிமாவில் இருக்கிறீர்களா? அல்லது நீங்கள் நடிப்பைக் காதலிக்கிறீர்கள் என்பதனால் சினிமாவில் இருக்கிறீர்களா? அல்லது பணத்துக்காகவா?**

*பணம்? கண்டிப்பாக பணம் சம்பாதிக்கத்தான் இதில் இருக்கிறேன். ஆனால் என் விஷயத்தில் என் தொழிலும்* (Profession) *ஈடுபாடும்* (Passion) *ஒரே விஷயமாக இணைந்துவிட்டன.* I can't say I just love acting. I want to be heared. *அதனால்தான் சினிமாவில் இருக்கிறேன்.*

*ஐ வாண்ட் டு பி ஹியர்ட் என்ற துடிப்பினால்தான் நான் முதலில் பரதநாட்டியம் கற்றுக்கொண்டேன். உதயசங்கர் தான் என் ஹீரோ. என் ஆதர்ஸம். அப்புறம் நாட்டியமாட ஆரம்பித்த பிறகுதான் தெரிந்தது. ம்ஹூம்... ரொம்பக் கொஞ்சம் பேருக்குத்தான் என்னைத் தெரிகிறது. ஐ காட் ஸ்டக். உடனே சினிமாவுக்கு வந்தேன். அதிலும் எனக்கு உதயசங்கர் தான் ஹீரோ. அவர் டான்ஸ், சினிமா இரண்டையும் கம்பைன் பண்ணி வெற்றி கண்டவர். சினிமாவுக்கு நான் வந்தபோதும் அஸிஸ்டெண்ட் டைரக்டராகத்தான் ஆரம்பித்தேன். அப்புறம் தெரிந்தது. டைரக்டராக இருந்தால் தெரியமாட்டேன். அதனால் நடிகனாகிவிட்டேன்.*

**ஐ வாண்ட் டு பி ஹியர்ட் என்பதே நோக்கமானால் நாளைக்கு இந்த சினிமாவை விடவும் அதிகம் பேரை அடைகிற சாதனம் ஒன்று கிடைத்தால் இதை விட்டுவிட்டுப் போய்விடுவீர்களா?**

*போய்விடுவேன். சினிமாவோடு எனக்குள்ள பந்தம் சம்பிரதாயமான திருமணம் அல்ல. இந்தக் கல்யாணம் அன்கன்வென்ஷனல் மேரேஜ். இதில் விவாகரத்தும் சாத்தியம்தான்.*

**இவ்வளவு தெளிவாய் சினிமாவை ஒரு சாதனமாக மட்டும் பார்க்கிற நீங்கள் எப்படி மிக அபத்தமான படங்களிலெல்லாம் நடிக்கிறீர்கள்?**

*எனக்கு அதெல்லாம் கிடையாது. நான் ஒரு ப்ரொஃபஷனல். டைரக்டர் விரும்புகிறபடி நடிக்கிறவன். நடிப்பதற்கு என்று வந்துவிட்டபிறகு அதைச் செய்ய மாட்டேன்; இதைச் செய்யமாட்டேன் என்றெல்லாம் சொல்லுவது சரியில்லை. சாந்தி கிருஷ்ணா, சுஹாசினி எல்லாம் சொல்லுகிற மாதிரி, தொட்டு நடிக்கமாட்டேன்,* I wan't hug *என்று சொல்வது* unethical.

*சரி. தொழில் என்பதற்காக சொன்னபடி செய்வதாக ஒரு தொழில் தர்மம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நடிக்கிற போது, கத்தி சண்டை போடுகிறபோதெல்லாம் உங்களுக்கே அப்படியெல்லாம் செய்வது உறுத்தலாக இல்லையா?*

*நோ, நோ. நிச்சயமாய் இல்லை. அந்த மாதிரி எல்லாம் நடிப்பதை நான் விரும்பித்தான் செய்கிறேன். ஒரு குழந்தை மாதிரி எனக்கு அதெல்லாம் செய்வதில் ஒரு குதூகலம், சந்தோஷம் இருக்கிறது. நஸிருதின்ஷா மாதிரி நான் இந்தப் படங்களிளெல்லாம் நடிக்கமாட்டின் என்று சொல்லமாட்டேன். அப்படி என்றால் அவருக்குள்ள இருந்த குழந்தை செத்துவிட்டது என்று அர்த்தம். ஐ ஸ்டில் ஹாவ் தி சைல்ட் இன் மி. இல்லாவிட்டால் வாழ்க்கை வறண்டு போய்விடும்.*

*ஆனால் 'தாயில்லாமல் நானில்லை' படத்தில் நீங்கள் கத்தி சண்டை போடுகிறபோதே உங்கள் இண்டலக்சுவல் ரசிகர்களுக்காக 'இதோ பார், நான் கூட இதெல்லாம் செய்கிறேன்' என்று காட்டிக் கொள்கிற பாவனையோடே அது இருக்கிறது. அது எப்படி?*

*அந்த மாதிரி அதில் தெரிந்திருந்தால் நான் ஃபெயில் ஆகிவிட்டேன் என்று அர்த்தம். ஐயாம் அஷேம்ட். அந்த மாதிரி எனக்கு ஒன்றை சரியாய் செய்ய வராமல் தோற்றுவிட்ட படங்களைப் பற்றி ஐயாம் அஷேம்ட்.*

**உங்களை சினிமாத்துறையில ஆரம்பத்தில் வெறுமே உடம்பை காட்டித்தானே பயன்படுத்தி இருக்கிறார்கள்? குறிப்பாக மலையாளப்**

**படங்களில் - இதைப்பற்றி உங்களுக்கு வெட்கமாக இல்லையா?**

உடம்பைக் காட்டினால் என்ன? இங்கே நாம் ரொம்பவும் பெண்ணுடைய உடம்பைப் பற்றியும் ஆணுடைய உடம்பைப் பற்றியும் அப்செஸ்ட் ஆக இருக்கிறோம். நிறைய பிரமை இருக்கிறது. இதெல்லாம் உடைய வேண்டுமானால் முதலில் எல்லாவற்றையும் காட்டுங்கள். பெண்ணைக் காட்டுங்கள். அவள் உடம்பைக் காட்டுங்கள். அவள் முலைகளைக் காட்டுங்கள் (show her tits). அப்புறம் அவள் நடந்து போவதைக் காட்டுங்கள். ஏணியில் ஏறுவதைக் காட்டுங்கள். ஆணைப் போலவே ஆஃபீஸ் போவதைக் காட்டுங்கள். அவளுக்கு மூளை இருப்பதைக் காட்டுங்கள். இதுதான் நடக்கக் கூடியது.

**உங்களுடைய மாரல் வேல்யூஸ் என்ன? இது சரி, இது தப்பு என்பது பற்றி எப்படி முடிவுக்கு வருகிறீர்கள்?**

நான் பாதிக்கப்படுவதெல்லாம் அமெரிக்கச் சிந்தனையால்தான். அமெரிக்கப் புத்தகங்களும், அமெரிக்க சினிமாக்களும்தான். அதனால் என்னுடைய மாரல் வேல்யூஸ் எல்லாமே கொஞ்சம் மரபிலிருந்து விலகியதாகத்தான் இருக்கும்.

**மத அடிப்படையிலான சடங்குகளை நீங்கள் பின்பற்றுவதில்லையா?**

இல்லை. எனக்கு ரிச்சுவல்சில் நம்பிக்கைக் கிடையாது.

**உங்களுக்குப் பூணூல் போட்டார்களா?**

இல்லை. வேண்டாமென்று சொல்லிவிட்டேன். பூணூல் போட வேண்டுமென்று வீட்டில் சொன்னபோது, நான் வளர்ந்தவனாய் விவரம் தெரிந்தவனாயிருந்தேன்.



**கடவுள் நம்பிக்கைகள்?**

என்னுடைய கடவுள் நம்பிக்கைகளை பாதித்தது என் நண்பர் வட்டம் தான். நான்கைந்து நண்பர்கள் தினசரி அரட்டையடிக்கிற வழக்கம். அதில் ஒருவன் ஆஸ்திகன். இன்னொருவன் நாஸ்திகன். அவர்கள் விவாதங்களை நான் கேட்பேன். ஆஸ்திகர்கள் கடைசியாகக் கேட்பது 'சரி, நமக்கு மேலே ஒரு சக்தி இருக்கிறதா

*இல்லையா?' என்பதுதான். என் நாஸ்திக நண்பன் சொன்னான் : 'இருந்து விட்டுப் போகட்டும். நான் அதை பூஜை செய்து கொண்டிருக்க முடியாது. எலக்ட்ரிசிட்டியும் கண்ணுக்குத் தெரியாத பெரிய சக்திதான். ஆனால் நாம் விளக்குக் கம்பத்தையெல்லாம் கும்பிடுவதில்லை.' நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.*

**அப்படியானால் நீங்கள் பங்கேற்கும் படங்களுக்கு பூஜை போடாமல் இருக்கும்படி ஆலோசனை சொல்லலாமே?**

*நம்பிக்கையுள்ளவர்கள் செய்துவிட்டுப் போகட்டும். தவிர, கடவுள் இல்லாவிட்டாலும் இருந்தாலும் மனிதனுக்குக் கடவுள் தேவை. அந்த மாதிரி ஒரு நம்பிக்கை இல்லாவிட்டால் ஏராளமான ஜனங்கள் வாழ்வே சூன்யமாகிவிடும். லெட் தெம் ஹாவ் இட்.*

**பூஜை போடாமல் படம் எடுத்துவிட்டு, ஏதோ காரணத்துக்காக அந்தப்படம் தோல்வியடைந்து விட்டாலும்கூட, பூஜை போட்டிருக்கலாமே என்று உங்கள் அடி மனசில் நினைப்பீர்களோ என்னவோ?**

*நிச்சயம் மாட்டேன். பூஜை போட்டாலும் பல படங்கள் தோல்வி யடைவது எனக்குத் தெரியும். பதினாறு வயதினிலே முகூரத் ஷாட் போது லைட் அணைந்துவிட்டது. எவ்வளவு பெரிய அபசகுனம் இது - வழக்கமாய் நினைக்கிறபடி. அந்தப் படம் ப்ரமாதமாய் வெற்றியடைந்த பிறகு, எல்லாரும் தங்கள் படத்தின் பூஜையில் விளக்கு அணையாதா என்று வேண்டிக் கொள்கிறார்களே!*

**இப்படிப்பட்ட ஒரு சினிமாத் துறையில் உங்கள் அறிவை நீங்கள் எப்படி பயன்படுத்துகிறீர்கள்? அபத்தமான, அசட்டுத்தனமான காட்சிகள் படமாகிற போது உங்கள் கருத்துக்களைச் சொல்ல மாட்டீர்களா?**

*நிச்சயம் சொல்லுகிறேன். என் யோசனைகளை டைரக்டரிடம் சொல்லுகிறேன். ஆனால் இறுதி முடிவு டைரக்டருடையதுதான். அவர் என் கருத்துக்களை நிராகரிப்பதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. ஐ கேன் ஒன்லி சஜெஸ்ட். ஐ கெனாட் டிக்டேட்.*

**மோசமான படங்கள் வெற்றிகரமாக ஓடுவதைவிட சில நல்ல படங்களில் நடித்து அவை கமர்ஷியலாகத் தோல்வியடைந்தாலும் மனசுக்கு திருப்தி ஏற்படுவதில்லையா?**

*இல்லை. ஒரு இன்டெலக்சுவலான படத்தில் கஷ்டப்பட்டு நடித்து நான் தோற்றுப் போனாலும், படமே ஓடாவிட்டாலும் பாதிப்பு கிடையாது. ரசிகர்கள், பாவாயில்லை. கமல் ட்ரைட் சம்திங் என்று விட்டுவிடுவார்கள். பாப்புலர் படங்கள் தோற்றுப்போனால் நான் சினிமாத் துறையிலேயே இருக்க முடியாது. அதனால் அந்தப் படங்களைப் பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன். மக்கள்*

*விரும்புவதையே செய்ய விரும்புகிறேன். அவர்களோடே நான் எப்போதும் இருக்க ஆசைப்படுகிறேன்.*

**அப்படியானால் நல்ல சினிமாவின் வளர்ச்சியில் உங்கள் பங்கு என்ன?**

*நான் செய்வது இரண்டுக்கும் நடுவே எங்கேயோ இருக்கலாம். ஐ டூ எ டைட்ரோப் வாக்கிங். சினிமாவில் டைரக்டருக்கு நான் முக்கியத்துவம் கொடுப்பது ஒருவேளை என் பங்காக இருக்கலாம்.*

**'ராஜ பார்வை' படம் கமர்ஷியலாகத் தோல்வியடைந்தது. அதை ஒரு நல்ல சினிமாவுக்கான முயற்சி என்று சொல்லப்படுகிறது. எனகது அப்படிப் படவில்லை. அது ஜனரஞ்சகமாக எடுக்க முயற்சித்து தோற்றதுதான். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

*அது ஒன்றும் ஆர்ட் ஃபில்ம் எல்லாம் கிடையாது. எடுக்கும் போதே இது ஜனரஞ்சகப்படம் என்று தான் திட்டமிட்டோம். அதுவும் ஒரு டைட்ரோப் வாக்கிங்தான். அது எங்கேயோ தவறிவிட்டது.*

**ஜனங்களிடம் நல்ல சினிமா விலை போகாது என்று கருதுப்படுகிறது. விலைபோகிற சினிமாவில் இருக்கக்கூடிய உங்களைப் போன்ற ஒரு சிலர் சத்யஜித்ராய், ம்ருணாள் சென் படங்களை ரசிக்கிறீர்கள். அப்படிப்பட்ட படங்கள் பரவலாவதற்கு என்ன வழி?**

*ராய், சென் படங்கள் சிறந்த படங்கள்தான். ஆனால் நம் ஊர் சூழ்நிலையில் எனக்கு ஷ்யாம் பெனகல் முறையில் படம் எடுப்பதுதான் சரி என்று தோன்றுகிறது.*

**இனி, ஒரு கலைஞனென்று முறையில் உங்கள் சிக்கல் என்ன? உங்கள் நடிப்பை வளர்த்துக் கொள்ள என்ன செய்கிறீர்கள்?**

*ஏராளமாகப் படிக்கிறேன். ஏராளமான சினிமாக்களைப் பார்க்கிறேன். குறிப்பாக ஃபிரெஞ்ச், இத்தாலிப் படங்கள். கமலஹாசன் படங்களை நான் பார்ப்பதில்லை. அவற்றிலிருந்து கற்றுக்கொள்ள எனக்கு எதுவுமில்லை.*

**நீங்கள் நடிக்கிற பாத்திரங்களுக்கும் உங்களுக்கும் இருக்கிற தொடர்பு என்ன? வறுமையின் நிறம் சிவப்பில் வரும் கோபக்கார இளைஞனோ, குரு படத்தில் வருகிற பழிக்குப்பழி ஆசாமியோ, கமல் என்ற மனிதனை எப்படிப் பாதிக்கிறார்கள்?**

*ஒரு நடிகனாய் இருப்பதில் எனக்குள்ள அனுகூலம் இதுதான். ஏராளமான மனிதர்களின் வாழ்க்கையை நான் வாழ்ந்து பார்த்துவிடுகிறேன்; அவர்களுக்குள்ள பிரச்சனைகளை அனுப விக்காமலே! ஐ ஹாவ் தட் எக்ஸ்பீரியன்ஸ் வித்தவுட் தி கான்*

*ஸிக்வன்ஸ். நடிகனாயிருப்பதில் வாழ்க்கையைப் பற்றி இந்த வயதிலேயே 40 வயது அனுபவம் கிடைத்துவிடுகிறது. அது நிச்சயம் கமல் என்ற மனிதனுக்குப் பயனுள்ளதுதான்.*

**ஆரம்பத்தில் கமலஹாசன் என்ற நடிகன் தெரியாமல் பாத்திரம் மட்டுமே தெரியும் நிலை இருந்தது. இப்போது என்ன பாத்திரம் செய்தாலும் கமல்தானே நினைவில் வருவது? இது நீங்கள் ஒரு ஸ்டார் ஆகிவிட்டதால் ஏற்பட்ட சிக்கல் அல்லவா?**

*இல்லை. நான் இப்போதும் பாத்திரமாகவே நடிக்க முயற்சிக்கிறேன். ஜெயகாந்தனின் எழுத்துகளில்கூட ஆரம்பத்தில் உங்களுக்கு 'ஒரு பிடி சோறு', 'கருணையினால் அல்ல' என்ற கதைத் தலைப்புக்கள் நினைவில் இருந்திருக்கும். இப்போது தலைப்பை மறந்துவிட்டு ஜெயகாந்தனின் புதுக்கதை என்றுதானே சொல்கிறீர்கள்? இதனால் ஜெயகாந்தனின் எழுத்துத் தரம் மாறிவிட்டதாகாது.*

**ஆனால் அதிகபட்சம் எந்த அளவுக்கு உங்களால் பல்வேறு பாத்திரங்களை சித்தரிக்கும் திறமையை அடைய முடியும் என்று நினைக்கிறீர்கள்?**

*அல்ட்டிமேட்லி எந்த சிறந்த நடிகனானாலும் சரி, பத்து பன்னிரெண்டு விதங்களில் தான் நடிக்க முடியும். ஒவ்வொரு விதத்திலும் நிறைய செய்துகாட்டிக் கொண்டிருக்கலாம். நான் என்னுடைய பத்தாவதற்கு வந்துவிட்டேன் என்று நினைக்கிறேன். இன்னும் மூன்று, நான்கு பாக்கியிருக்கலாம். அதில் நூறு இருநூறு படங்களைச் செய்ய முடியலாம்.*

**அப்படி செய்து முடிக்கும் போது நடிப்பதை விட்டுவிட்டு டைரக்ஷனுக்கோ அல்லது ஒரேயடியாக சினிமாவையே விட்டு விட்டு வேறு துறைக்கோ போய்விடுவீர்களா?**

*அந்த அலுப்பு எப்போது ஏற்படுமென்று தெரியாது. நாலு வருஷத்திலும் ஏற்படலாம். ஐம்பது வயதுக்குப் பிறகும் ஏற்படலாம். ஆனால் எப்போதும் செங்குத்தான மலையில் ஏறுவது போல் நான் போய் கொண்டே தான் இருப்பேன். அது மேல்நோக்கியும் இருக்கலாம். பக்கவாட்டிலும் இருக்கலாம். போய்க்கொண்டே இருக்கிறேன் என்பதுதான் முக்கியம்.*

**எவ்வளவு நாள் அப்படி? கலை ரீதியான திருப்தி நடிப்பில் உங்களுக்கே போய்விட்ட பிறகுமா? அப்படியானால் தொடர்ந்து இதிலிருப்பது பணத்துக்காக மட்டும்தானே?**

*பணத்துக்காகவும்தான் நான் நடிக்கிறேன் என்று முதலிலேயே சொன்னேன். ஆனால் நான் சம்பாதித்தது என் குடும்பத்துக்குப்*

*போதும் என்று முடிவு செய்யும் ஒரு கட்டத்தில் பணத்துக்காக காரியங்கள் செய்து கொண்டிருக்கமாட்டேன்.*

**சரி போதும் என்பதை முடிவு செய்வது எப்போது? மக்கள் விரும்புகிறார்கள் என்பதற்காகவே நாங்கள் இதைச் செய்கிறோம். நான் எப்போதும் மக்களோடு இருக்க விரும்புகிறேன் என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பிக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்வதில்லையா?**

*நம் ஊரில் இருக்கிற வறுமையை பற்றித்தானே சொல்கிறீர்கள். இங்கே ஒரு பக்கம் நிறைய செல்வமும், இன்னொரு பக்கம் வறுமையும் இருப்பது என்னையும் உறுத்தத்தான் செய்கிறது. ஐயாம் நாட் ஹேப்பி அபவுட் இட்.*

**நாளைக்கே உங்கள் வீட்டுக்குள் நாலாயிரம் ஐயாயிரம் ஜனங்கள் அரிவாளும் கம்பும் கத்தியுமாய் நுழைந்து 'இத பார் கமல், சம்பாதிச்சதெல்லாம் போதும் இனிமே எல்லாத்தையும் 'வி.ஆர். டேக்கிங் ஓவர்' என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?'**

*வெல், ஐ ஹாவ் டு ஃபேஸ் இட். மத்தியிலே கம்யூனிஸ்ட்கள் ஆட்சிக்கு வந்தால் நான் இந்தியாவை விட்டா ஓடிப்போய் விடமுடியும்? நோ. ஸ்விஸ் பேங்க்கில் பணத்தையெல்லாம் போட்டு வைத்துவிட்டு ஓடலாம். ஆனால் ஸ்விஸ் பேங்க்குக்குள்ளேயும் அரிவாளும் கத்தியும் கம்பும் வரலாம் இல்லையா?*

**அப்படியானால் அரசியல் ரீதியாக உங்கள் பார்வைதான் என்ன?**

*இப்போதைக்கு எதுவுமில்லை.*

**ஓட்டுப் போடுகிறீர்கள் அல்லவா?**

*யெஸ். ஆனால் நான் அரசியலைப் பற்றி இப்போது பேச முடியாது; பேசக்கூடாது. பேசினால் யாரும் கேட்கமாட்டார்கள். ஐயாம் ஒன்லி எ க்ளவுன். கோமாளி அரசியல் பேசினால் ஜனங்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.*

**நீங்கள் க்ளவுனாக, எண்டர்டெய்னராக மட்டும் தோன்றுவதற்குக் காரணம் உங்கள் சினிமாக்கள் தானே?**

*ஆமாம். ஆனால் சினிமா எண்டர்டெய்ன்மெண்டுக்காக மட்டும் தான் என்று நான் நினைக்கிறேன். அதனால் வேறு நல்ல விளைவுகள் வரலாம்; வந்தால் அது உபரியான இலாபம்தான். ப்ரைமரிலி சினிமா ஈஸ் டு எண்டர்டெய்ன்.*

**இப்படி எண்டர்டெய்ன்மெண்ட் என்ற பெயரால் ஜனங்களை அவர்கள் கவலைகளை மறக்கச் செய்து என்ன பயன்? சினிமா முடிந்த பிறகும் வாழ்க்கையை சந்திக்கும் திராணியில்லாதவர்களாக ஜனங்களை**

**எண்டர்டெய்ன்மெண்ட் என்ற எஸ்கேப்பிசம் ஆக்கிவிடு கிறதல்லவா?**

*இல்லை. அப்படியென்றால் சினிமாக்காரன் சொல்வதையெல்லாம் மக்கள் கேட்டுக் கொள்வார்கள் என்ற நிலைமை இருக்க வேண்டுமே; நான் அரசியல் பேசினால் ஒப்புக்கொள்ளமாட்டார்களே. அது அவர்கள் என் படங்களை மீறி, விழிப்பாய் இருப்பதைத்தானே காட்டுகிறது.*

**அப்படியானால் எம்.ஜி.ஆர். எப்படி சினிமா மூலமாக ஒரு அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொள்ள முடிந்தது?**

*எம்.ஜி.ஆர். விஷயம் வேறு. ஹி ஈஸ் எ ஃபினாமினன். அந்த மாதிரி இப்போது செய்ய முடியாது. என் க்ளவுன் இமேஜை விட்டுவிட்டுத்தான் நான் அரசியல் சொல்ல முடியும்.*

**யூ வாண்ட் டு பி ஹியர்ட் என்ற துடிப்பிற்கு வசதியாக சினிமாவைவிட அரசியல் சிறந்த சாதனமென்று நாளைக்கே தோன்றினால் அதைச் செய்வீர்களா?**

*செய்யலாம். மேபி. ஆனால் எனக்கு அரசியல் பற்றி இன்னமும் தெளிவான கருத்துக்கள் ஏற்படவில்லை, மதத்தைப் பற்றி கடவுளைப் பற்றி, மறுபிறவி இல்லையென்பதைப் பற்றியெல்லாம் எனக்குத் தெளிவான கருத்துக்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் அரசியல்...? நோ.*

**ஏன் அப்படி?**

*இப்போது இருப்பது சரியல்ல என்று தெரிகிறது. ஆல்டர்நேடிவ் என்ன? அமெரிக்கன் மாடல்? அங்கேயிருந்து இந்தியக் கலாச்சாரத்தைத் தேடி வருகிறார்கள். ஸோ, கம்யூனிஸம்? அதிலும் போலந்தைப் பற்றி நினைத்தால் குழப்பமாயிருக்கிறது. கார்ல்மார்க்சும் மனிதன்தான். தவறு செய்திருக்கலாம். என்னால் இன்னும் தாஸ்கேபிடலைப் படித்து முடிக்க முடியவில்லை. தூக்கம் வருகிறது. ஸோ, எனக்கு அரசியலைப் பற்றி இன்னமும் க்ளேரிட்டி வரவில்லை.*

**பணத்துக்காக கொஞ்சம், சொந்த ரசனைக்காக கொஞ்சம், புழுக்காக, ஈகோ சேட்டிஸ்ஃபேக்ஷனுக்காகக் கொஞ்சமென்பதாய் சினிமாவில் இருக்கிறீர்கள். நாளைக்கே இதை விட்டும் போயே விடலாம் என்கிறீர்கள். இப்படி எப்போதும் ஒரு ஆக்டிவான லைஃபை வாழ விரும்புகிற நீங்கள் மரணத்தைப் பற்றி யோசிப்பதில்லையா?**

*மரணத்தைப் பற்றி யோசிக்காமல் இருக்க முடியுமா? ஐ டு திங்க் அபவுட் டெத். ஆனால் மற்றவர்களுடைய மரணங்கள் நமக்கு*

*அதிக பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. அம்மாவின் சாவு கூட ஒரு நாள், இரண்டு நாள், ஒரு வாரம் உறுத்துகிறது. அப்புறம் வி கேரி ஆன் வித் அவர் லைஃப். பிறர் மரணத்தைப் பற்றி யோசிப்பதுகூட அவர்களால் நமக்கு ஏற்பட்ட இழப்பால்தான். என்னுடைய மரணம் மட்டும்தான் என்னைக் கவலைப்படுத்தும். பட் ஐ வோண்ட் பி தேர் டு வொரி அபவுட் இட்.*

**மரணத்திற்குப் பிறகு எப்படி உங்களை உலகம் நினைவுகூர வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? ஒரு நூறு வருஷம் கழித்து உங்களை நினைத்துப் பார்ப்பார்களா?**

*சினிமாவின் சரித்திரத்தில் என் பெயர் ஆழமாகப் பதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே விரும்புகிறேன். ஹியர் ஈஸ் சம்படி ஹூடிட் சம்திங் சின்சியர் இன் சினிமா என்ற நினைவு இருந்தால் போதும்.*

**அப்படியானால் உங்கள் அதிகபட்ச அபிலாஷை சினிமாவோடு குறுகிவிடுகிறது. சினிமாவை விட்டுவிட்டுப் போய்விடலாம் என்பதற்குப் பொருத்தமாய் இல்லையே?**

*அப்போதும்கூட என்பெயர் ‘ஒரு சக்ஸஸ்ஃபுல் சினிமா வாழ்க்கையைத் துறந்துவிட்டு இன்னொன்றிற்குப் போனவன்’ என்பதாக சினிமா சரித்திரத்தில் இருக்கும்!*

*இதற்குப் பிறகும் சிறிது நேரம் சில கவிஞர்களைப் பற்றி, சில கவிதைகள் பற்றி, கமலஹாசனின் எழுத்துக்களைப் பற்றி, சில டைரக்டர்களின் பாவனைகளைப் பற்றி - பிரசுரிக்கப் போவதில்லை என்ற வாக்கியத்தின் பின்பலத்தில் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது சந்தித்தது இன்னொரு கமலஹாசனை.*

*பிறகு புகைப்படங்கள் எடுத்து முடிந்து வெளியே வருகிற போது எழுத்தாளர் பாலகுமாரனும் கவிஞர் மு. மேத்தாவும் கமலை சந்திக்கக் காத்திருந்தார்கள்.*

*எந்தக் கமல் நிஜமான கமல்? இராவணனின் பத்து தலைகளில் எந்தத் தலை நிஜமான தலை? நாடக மேடையில் சொல்லிவிடலாம். நிஜமான இராவணன் இருப்பானானால், சொல்வது சிக்கல்தான்.*

*கமலஹாசனின் இரண்டு முகங்களும் நிஜமான முகங்கள்தான். ஒன்றிற்கொன்று எதிரான இரண்டு நிஜமான முகங்கள் இருப்பது இந்திய சமூகத்தில் சாதாரணமாகிவிட்டது.*

***தீம்தரிகிட 15.3.1982***